மணிச்சுடர் 2/2.7.2012

## சிங்கப்பூரில்

# ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர்களின் வணிக வலைப்பின்னல் கலந்துரையாடல்

சிங்கப்பூர், ஜூலை 1–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), கடந்த சனிக்கிழமை 30–06–2012 அன்று, மாலை 5 மணி முதல் 7 மணி வரை, "வணிக வலைப்பின்னல் கலந்துரை யாடல்'' (BUSINESS NET-WORKING SESSION) நிகழ்ச்சி ஒன்றை, சிங்கப்பூர் ஜாலான் சுல்தான் சாலையில் அமைந்துள்ள சுல்தான் பிளாசாவில் மிகச்சிறப்பாக நடத்தியது.

சிங்கப்பூரில் புதிதாக சொந்தத் தொழில் துவங்கு வது பற்றியும், அதில் ஏற்படும் சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்ளும் யுக்திகள் பற்றியும், தொழில் முனைவோருக்கான அடிப்படை தகுதிகள் பற்றியும் இக்கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டன.

சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களும், சிங்கப்பூரில் பணிப்புரியும் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் பலரும் கலந்துகொண்ட இக்கலந்துரையாடல், பயனுள்ள பல தகவல்களை பகிர்ந்து கொண்ட அரிய நிகழ்வாக அமைந்திருந்தது.

